**ஜெ.ஜெ. கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)**
சிவபுரம், புதுக்கோட்டை - 622 422
(மறுசுழற்சி தரஆய்வு - 4ஆம் சுற்று **NAAC)**

**பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவுபெற்றது**

**தமிழ்த்துறை**
**பாடத்திட்டக் குழுத் தீர்மானங்கள்**

கூட்டம் எண்: **IX** நாள்: 03-05-2023 நேரம்: முற்பகல் 11:00 மணி

தன்னாட்சித் தகுதி பெற்றது முதல் கல்லூரி அனைத்துப் பாடப் பிரிவுகளுக்குமான கலைத்திட்டம் மற்றும் பாடத்திட்டங்களை மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை தொடர்ந்து மறுசீரமைவு செய்து வருகிறது. அதன்படி 2022-இல் தான் புதிய பாடத்திட்டங்கள் உருவாக்கப்பட்டது என்றாலும் தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்தின் அறிவிப்பையும் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் சுற்றறிக்கையையும் செயல்படுத்தும் நிலையில் இளநிலை தமிழ் இலக்கியம் மற்றும் பகுதி – I மொழிப்பாடங்களின் கலைத்திட்ட மறுசீரமைவுக்கானப் பாடத்திட்டக் குழுக் கூட்டம் இன்று (03-05-2023) நடத்தப்படுகிறது.

எனவே, இந்தக் கூட்டத்தில் 2023 - 2024ஆம் கல்வியாண்டு முதல் பின்பற்ற வேண்டிய புதிய கலைத்திட்டத்தின்படியான பாடத்திட்டங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டன. அதன் அடிப்படையில் எடுக்கப்பட்டப் பரிந்துரைகளும் தீர்மானங்களும் கல்விசார் குழுவின் ஒப்புதலுக்கு முன்மொழியப்படுகின்றன.

**முன்மொழியப்பட்டத் தீர்மானங்களும் பரிந்துரைகளும்**

1. பாடத்திட்டக் குழுவின் உறுப்பினர்களான முனைவர் க.செந்தாமரை, முனைவர் ம.கலா ஆகிய இருவரும் பணிமாற்றம் பெற்றதன் காரணமாக துறைப்பேராசிரியர்களான முனைவர் தெ.வேல்பாண்டிச்செல்வி, திருமதி லெ.அஞ்சலை ஆகிய இருவரையும் குழு உறுப்பினர்களாக இணைத்துக்கொள்ளக் குழு ஒப்புதல் அளிக்கிறது.

2. தமிழ்நாடு உயர்கல்வி மன்றம் (TANSCHE) உருவாக்கி பல்கலைக்கழகம் மூலம் அறிவித்துள்ள பாடத்திட்டங்களில் 75 விழுக்காடு ஏற்றுக்கொள்ளவும் 25 விழுக்காடு மாற்றம் செய்துகொள்ளவும் குழுப் பரிந்துரை செய்கிறது.

3. முதல் பருவத்தேர்வு முடிவுகளைக் கருத்தில் கொண்டு 2022 ஆம் ஆண்டின் பாடத்திட்டங்களை எதிர்வரும் பருவங்களுக்கும் மாற்றமின்றி பின்பற்றிக்கொள்ள குழு ஒப்புதல் அளிக்கிறது.

4. இக்கூட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள்/முடிவுகள் மீது மாற்றம் செய்யும் வகையில் TANSCHE மற்றும் பல்கலைக்கழக அறிவிப்புகள் வருமேயானால் மீண்டும் பாடத்திட்டக் குழு கூடி ஆலோசிக்கக் குழு ஒப்புதல் அளிக்கிறது.

5. தமிழ்நாடு மாநில உயர்கல்வியின் உயர்மட்டப் பாடத்திட்டக் குழுவின் (TANSCHE) வழிகாட்டுதலின் படியும் பல்கலைக்கழக மானியக் குழு (UGC –

LOCF) பரிந்துரைக்கும் பெயரிடு முறைகளையும் கொண்டு புதிய கலைத்திட்டத்தை உருவாக்கக் குழுப் பரிந்துரை செய்கிறது.

6. கலைத்திட்டத்தில் பாடத்திட்டப் பகிரமைவுக்குக் குழுப் பரிந்துரை செய்கிறது.

**இளநிலை - பாடத்திட்டப் பகிரமைவு**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Part I** | **LC** | பகுதி—I மாற்றுப் பாடத்திட்டம் | **4** | **12** | **400** |
| **Part II** | **ELC** | பகுதி–II ஆங்கிலம் | **4** | **12** | **400** |
| **Part III** | **CC** | முதன்மைப் பாடங்கள் | **15** | **83** | **1500** |
| | **DSE** | துறைசார் சிறப்பு விருப்பப் பாடங்கள் | **8** | | **800** |
| **Part IV** | **SEC** | திறன் மேம்பாட்டு விருப்பப் பாடங்கள் | **8** | **32** | **800** |
| | **AECC** | கட்டாயத் திறனூக்கப் பாடங்கள் | **4** | | **400** |
| | **FC** | அடிப்படைப் பாடம் | **1** | | **100** |
| | **EVS** | சுற்றுச்சூழல் கல்வி | **1** | | **100** |
| | **VE** | மதிப்புக் கல்வி | **1** | | **100** |
| | **IP** | தொடர்புப் பயிற்சி | **1** | | **100** |
| **Part V** | **Ex** | புறநிலைச் செயல்பாடுகள் | | 1 | |
| கூடுதல் | | | **47** | 140 | 4700 |

7. மறுசீரமைவுக் கலைத்திட்டத்தையும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட முதல் இரண்டு பருவங்களுக்கான (2023-2024) பாடத்திட்டங்களையும் பின்பிற்றிட குழு ஒப்புதல் அளிக்கிறது.

8. பூளும்ஸ் வகைப்பாட்டைப் (Bloom's Taxonomy) பயன்படுத்திப் பாடத்திட்டப் பயன்களை மதிப்பிடு செய்யும் முறையைக் குழுப் பரிந்துரை செய்கிறது.

9. சுற்றுச்சூழல் கல்வி, மதிப்புக் கல்வி ஆகிய பாடங்களை 2022ஆம் பாடத்திட்டத்தையே 2023-2024ஆம் பாடத்திட்டத்திற்கும் முறையே நான்கு ஐந்தாம் பருவங்களில் பின்பற்றிக் கொள்ள பரிந்துரைச் செய்கிறது.

10. தேசிய தரக்கட்டுப்பாடு தரநிர்ணயக் குழுவின் (NAAC ) கீழ்க்காணும் வழிமுறைகளைக் கலைத்திட்டத்தில் பின்பற்றிட ஒப்புதல் அளிக்கிறது.

- பட்டக்கல்வி நோக்கங்கள் (PEOs), பட்டக்கல்வி பயன்கள் (POs), பட்டக்கல்வி சிறப்புப் பயன்கள் (PSOs), பாடத்திட்ட நோக்கங்கள் (CEOs), பாடத்திட்டப் பயன்கள் (COs) பற்றி செய்யப்பட்டச் செயல்முறைகள்

- POs, PSOs, Cos ஆகியவற்றிற்கு இடையிலான இயைபைக் கணக்கீடு முறைமை

11. TANCHE பரிந்துரைத்துள்ளது படி பகுதி I விருப்ப மொழிப்பாடத்திற்கு தமிழ் இலக்கியம் பயிலும் மாணாக்கர்களுக்கு சிறப்பு மொழிப் பாடங்களையும் மற்ற பாடப்பிரிவுகளுக்கு பொதுத்தமிழ் மொழிப்பாடங்களையும் இணைத்துக் கொள்ள ஒப்புதல் அளிக்கிறது.

12. பகுதி - I இந்தியைப் பொருத்தமட்டில் 2022ஆம் பாடத்திட்டத்தையே உணவக மேலாண்மைத் துறைக்கான சிறப்பு இந்தி மொழிப்பாடங்களையும் மற்ற பாடப்பிரிவு மாணாக்கர்களுக்கான பொது இந்தி மொழிப்பாடங்களையும் தொடர்ந்திடக் குழுப் பரிந்துரை செய்கிறது,

13. TANSCHE வலியுறுத்தலின் படி பகுதி I இல் தமிழைத் தேர்வுச்செய்யாத மாணார்க்களுக்கு சிறப்புத் தமிழ்ப் பாடங்களையும் அடிப்படைத்தமிழ்ப் பாடங்களையும் பின்பற்றிடக் குழு ஒப்புதல் வழங்குகிறது.

14. கலைத்திட்டத்தில் அமைந்துள்ள படி திட்டக்கட்டுரையுடன் இணைந்த பதினைந்து முதன்மைத் தாள்களையும் ஏற்றுக் குழுப் பரிந்துரை செய்கிறது.

15. பாடத்திட்டங்களுக்கு இடப்பட்டுள்ள குறியீடுகளை ஏற்று ஒப்புதல் அளிக்கிறது.

16. நான்காம் பருவத்தின் தொடர் விடுப்புக்காலத்தில் தொடர் இணைப்புப் பயிற்சியை (Internship) இணைத்துக் கொள்ளவும் அதன் மதிப்புப்புள்ளியை ஐந்தாம் பருவ மதிப்பெண் பட்டியலில் இணைத்துக்கொள்ளவும் குழு ஒப்புதல் அளிக்கிறது.

17. பகுதி I மொழிப்பாடத்தில் ஹிந்தி மற்றும் தமிழ் அல்லாது பிற மொழிகளை மாணவர்கள் தேர்வுச் செய்தால் வுயடிளஉாந அதற்கான பாடத்திட்டத்தை வழங்காத நிலையில்) பல்கலைக்கழகப் பாடத்திட்டத்தைப் பின்பற்றிக் கொள்ள பரிந்துரை செய்கிறது.

18. திறன்மேம்பாட்டு விருப்பப் பாடத்தொகுப்பில் இருந்து TANSCHE அறிவுறுத்திய படி தெரிவுச்செய்து கொள்ள ஒப்புதல் அளிக்கிறது.

19. துறைசார் விருப்பப் பாடங்களுக்கும் பட்டியிலில் இருந்து தெரிவுச் செய்துகொள்ள குழுப் பரிந்துரை செய்கிறது.

20. கட்டாய திறனூக்கப் பாடங்களுக்குக் கல்லூரியின் உள்தர உறுதிக் குழுவின் மேற்பார்வையில் உருவாக்கப்பட்ட 1.Introduction to study skills, 2. Life Skills 3.Job orientation skills 4.Computing skills ஆகிய பாடத்திட்டங்களைப் பின்பற்றிக்கொள்ள குழுப் பரிந்துரை செய்கிறது.

21 பகுதி I தமிழ் பாடங்களுக்குத் தேவையான பாடநூல்களைத் துறை உருவாக்கிக் கொள்ள அனுமதியளிக்கிறது.

22. பகுதி I TANSCHE உள்ளடக்கத்தில் தாள் 1 இல் சிறுகதை, தாள் 3இல் நாவல், தாள் 4இல் நாடகம் ஆகிய பகுதிகளுக்குப் பதிலாக 2022-2023 பாடத்திட்டத்தில் உள்ள சிறுகதைத் தொகுதி, நாவல்(கீதாரி),நாடகம்(18ஆம் நாள் போர்) தொடர்ந்து பின்பற்றிக் கொள்ள குழுப் பரிந்துரை செய்கிறது. மேலும்

இந்தக் கலைத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள 28 புதிய தாள்களை ஏற்று குழுப்பரிந்துரை செய்கிறது, புதிய தாள்கள் பின்வருமாறு

1. தமிழியல் வள ஆதாரங்கள்
2. தமிழ் மொழி அமைப்பு
3. தமிழும் பொருண்மையியலும்
4. தமிழர் கலையியல்
5. அற இலக்கியம்
6. தமிழ் இலக்கிய வரலாறு
7. காப்பியங்கள்
8. பக்தி இலக்கியம்
9. பொருள் இலக்கணம்
10. நாட்டுப்புறவியல்
11. யாப்பும் அணியும்
12. தமிழரின் வேளாண்மைச் சிந்தனைகள்
13. அண்ணாயியம்
14. கலைஞரின் தமிழ்ப்பணியும் சமுகப்பணியும்
15. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்
16. அயலகத் தமிழ் இலக்கியம்
17. சமுக நீதி இயக்கங்களும் இலக்கியங்களும்
18. உரையாசிரியர்கள்
19. தமிழ் அழகியல்
20. தமிழ்ப் பண்பாட்டு வரலாறு
21. நாட்டார் மரபுகள்
22. நோக்கு நூல்கள்
23. பொது மொழியியல்
24. பயன் முறைத் தமிழ்
25. நூலகவியல்
26. போட்டித் தேர்வுக்குரிய இலக்கிய வரலாறு
27. அறிவியல் தமிழ்
28. தொழில் முனைவுத் தமிழ்

23.2019 ஆம் கலைத்திட்டத்தில் ஐந்தாம் பருவத்தில் வைக்கப்பட்டுள்ள ஆய்வியல் நெறிமுறைகள் -அறிமுகம் என்ற தாளைத் திட்டக்கட்டுரையாக ஏற்றுக்கொள்ள குழுப் பரிந்துரை செய்கிறது.

**கூட்டத்தில் பங்கேற்ற உறுப்பினர்கள்**

| எண் | பெயர் | பொறுப்பு | கையொப்பம் |
|---|---|---|---|
| 1. | முனைவர் கு.தயாநிதி<br>துறைத்தலைவர், தமிழ்த்துறை | தலைவர் | 3/5/23 |
| 2. | முனைவர் M.இராஜசேகரன்<br>இணைப்பேராசிரியர்<br>தமிழ்த்துறை<br>பிசப் ஹிபர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி | பல்கலைக்கழக உறுப்பினர் | 3/5/23 |
| 3. | முனைவர் S.ஸ்ரீதேவி<br>உதவிப் பேராசிரியர், ஹிந்திதுறை<br>தூய வளனார் கல்லூரி, திருச்சிராப்பள்ளி | பல்கலைக்கழக உறுப்பினர் | |
| 4. | முனைவர் மு.பழனியப்பன்<br>இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை<br>அரசுக் கலை அறிவியல் கல்லூரி,<br>திருவாடனை, இராமநாதபுரம் | பாட வல்லுநர் | 3/5/23 |
| 5. | முனைவர் S.வீரமணி<br>இணைப் பேராசிரியர்,<br>அகராதியியல் துறை,<br>தமிழ்ப் பல்கலைக்கழகம்<br>தஞ்சாவூர் | | 03/05/23 |
| 6. | திரு. S.சந்திரகுமார்<br>முதுநிலை விரிவுரையாளர்<br>நுண்கலைத் துறை<br>கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை | வெளிநாட்டுப் பாட வல்லுநர் | Attended through Online. |
| 7. | முனைவர் கி.கோவிந்தன் | துறை உறுப்பினர் தமிழ் | |
| 8. | முனைவர் இரா.லதா | | |
| 9. | முனைவர் பா.கவிதா | | |
| 10. | முனைவர் தெ.வேல்பாண்டிச் செல்வி | | D Vel 3/5/23 |
| 11. | திருமதி லெ.அஞ்சலை | | |
| 12. | திரு.S.ரெங்கசாமி | | 03/05/23 |